# துவாக்குடி நகராட்சி

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>MCR No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of Council</th></tr>
<tr><td>07.11.2019</td><td></td><td>2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 7–ம் தேதி வியாழக்கிழமை மாலை 05.00 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.<br>தனி அலுவலர்,<br>துவாக்குடி நகராட்சி.</td><td></td></tr>
<tr><td>07.11.2019</td><td>413</td><td><u>பொருள் எண். 1</u><br>திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவு செ.மு.எண்.332–II–9/2017/கனிமம் நாள். 30.10.2019–ன்படி துவாக்குடி நகராட்சி பகுதியில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள ரூ. 200.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றதை தொடர்ந்து கீழ்கண்ட விவரப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ( ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>15–வது வார்டு கருப்பு கோவில் பின்புறம் மற்றும் பழைய கருப்பு கோவில் பின்புறம் பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல்</td><td>50.00</td></tr>
<tr><td>2.</td><td>15–வது வார்டு வன்னியர் தெரு முதல் செடிமலை முருகன் கோவில் தெரு கிழக்கு பகுதி வரை பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல்</td><td>50.00</td></tr>
<tr><td>3.</td><td>9–வது வார்டு கருமாரியம்மன் கோவில் தெரு இடது மற்றும் வலது புறம் பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல்</td><td>50.00</td></tr>
<tr><td>4.</td><td>14–வது வார்டு ஏஜிஎல் கிரஷர் பகுதியில் பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல்</td><td>50.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>200.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : – 1. செயல்முறை உத்திரவு கடிதத்தினை பார்வையிட்டு பதியலாம்.<br>2. மேற்கண்ட பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளை அனுமதித்து ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 165/2019/இ1</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>07.11.2019</td>
<td>414</td>
<td><u>பொருள் எண். 2</u><br>திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். 164/செ.ம.தொ/2019 நாள். 11.07.2019 மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். 165/செ.ம.தொ/2019 நாள். 15.07.2019 –ன்படி துவாக்குடி நகராட்சி பகுதியில் 2017–18 மற்றும் 2018–19–ம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட திட்டப்பணிகளின் விவரத்தினை மாலைமலர் மற்றும் தமிழ்முரசு நாளிதழ்களில் வெளியிடும் சிறப்பு தொழில் மலரில் வெளியிடப்பட்டதற்கு கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற பில் பட்டியல் படி தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நாளிதழ் மற்றும் பட்டியல் விவரம்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>தமிழ்முரசு –<br>3300182365 / 01.09.2019</td><td>8001.00</td></tr>
<tr><td>2.</td><td>மாலை மலர் – தொழில்மலர்<br>TRY-D19080268</td><td>5000.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : – பணியின் அவசர அவசியம் கருதி தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 903/2019/இ1</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>07.11.2019</td>
<td>415</td>
<td><u>பொருள் எண். 3</u><br>திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். 171/செ.ம.தொ/2019 நாள். 19.07.2019 –ன்படி துவாக்குடி நகராட்சி பகுதியில் 2017–18 மற்றும் 2018–19–ம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட திட்டப்பணிகளின் விவரத்தினை தினகரன் நாளிதழில் சிறப்பு தொழில் மலரில் விளம்பரம் செய்தமைக்கு KAL Publications Pvt. Ltd. நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியல் தொகை ரூ. 6972/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : – பணியின் அவசர அவசியம் கருதி தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 903/2019/இ1</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>07.11.2019</td>
<td>416</td>
<td><u>பொருள் எண். 4</u><br>திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவு செ.மு.எண். 332–II–9/2017/கனிமம் நாள். 30.10.2019–ன்படி துவாக்குடி நகராட்சி பகுதியில் நான்கு பாதுகாப்பு சுற்றுச்சுவர் பணிகள் மேற்கொள்ள ரூ. 200.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றதை தொடர்ந்து மண்பரிசோதனை மற்றும் கட்டிட வடிவமைப்பு தயார் செய்து கொடுத்தமைக்கு தேசிய தொழில் நுட்ப கழக சிவில் இன்ஞினியரிங் பிரிவிலிருந்து கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற பில்பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td>
<td></td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td>வ.எண்</td><td>பட்டியல் எண் விவரம்</td><td>தொகை</td></tr>
<tr><td>1.</td><td>NITT/CE/2019 Dept. Ref. No. 51<br>Dt. 5.11.2019.(Soil Test)</td><td>35400.00</td></tr>
<tr><td>2.</td><td>NITT/CE/2019Dept. Ref. No. 54<br>Dt.6.11.2019.(Structural Design with drawing)</td><td>47200.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 168/2019/இ1
</td><td></td></tr>
<tr><td>07.11.2019</td><td>417</td><td><u>பொருள் எண். 5</u><br>
துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான JCB வாகனத்தின் பழுதுகளை அரசு அங்கீகாரம் பெற்ற ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்சி நிறுவனத்தில் சரி செய்வதற்குண்டான உத்தேச செலவினம் ரூ. 50000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 1366/2018/இ1
</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>07.11.2019</td><td>418</td><td><u>பொருள் எண். 6</u><br>
துவாக்குடி நகராட்சியில் உள்ளாட்சி தேர்தல் 2019 நடைபெறுவதை கருத்தில் கொண்டு அதற்கான முன்னேற்பாடு நடவடிக்கையாக வாக்காளர் பட்டியல் அச்சடிக்கவும், வாக்குச்சாவடி மையங்கள் வரைபடம், வாக்கு எண்ணும் மையம் ஏற்படுத்துதல் தொடர்பாகவும், வாக்கு சாவடிக்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யவும், வாக்குச்சாவடியில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை மையத்தில் பணிபுரியும் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு உதியம் வழங்கவும் மேலும் ஏனைய தேர்தல் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 15,00,000/– க்கு (பதினைந்து லட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 777/2016/சி1
</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>07.11.2019</td><td>419</td><td><u>பொருள் எண். 7</u><br>
துவாக்குடி நகராட்சி பகுதியில் அமைந்துள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட் தலைவர் திரு. டி. கந்தன், அருள்மிகு சோழிஸ்வரர் வழிபாட்டு மன்றத்தின் பொருளாளர் திரு. கே. சக்திவேல் மற்றும் 5–வது வார்டு பொது மக்களின் விண்ணப்பத்தின்படி நகராட்சிக்கு சொந்தமான சாலைகளில் எல்ஈடி தெருவிளக்குகள் அமைக்க கீழ்கண்ட விவரப்படி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை<br>( ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>1–வது வார்டு சோழிஸ்வரர் கோவில் கிழக்கு பகுதியில் 19 எண்ணிக்கை எல்ஈடி தெருவிளக்குகள் அமைத்தல்</td><td>9.80</td></tr>
<tr><td>2.</td><td>1–வது வார்டு செல்லாயி கோவில்  முதல் உடையான் குளம் வரை 8 எண்ணிக்கை எல்ஈடி தெருவிளக்குகள் மற்றும் நகராட்சி அலுவலக வளாகத்தில் சிறிய உயர் மின்கோபுர விளக்கு அமைத்தல்</td><td>9.65</td></tr>
<tr><td>3.</td><td>துவாக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைந்துள்ள சாலை பகுதியில்  16 எண்ணிக்கை எல்ஈடி தெருவிளக்குகள் அமைத்தல்</td><td>8.10</td></tr>
<tr><td>4.</td><td>திருச்சி தஞ்சை மெயின்சாலை முதல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க பிரிவு சாலை வரை 13 எண்ணிக்கை எல்ஈடி தெருவிளக்குகள் அமைத்தல்</td><td>9.50</td></tr>
<tr><td>5</td><td>துவாக்குடி நகராட்சி  ராவுத்தாண்மேடு மடத்தான் குளம் செல்லும் சாலை பகுதியில் 9 எண்ணிக்கை எல்ஈடி தெருவிளக்குகள் அமைத்தல்</td><td>6.15</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>43.20</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : – 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. பொது தனியார் கூட்டாண்மை (PPP-Public Private Partnership)முறையில் பராமரிப்பு பணி செய்யவும், மின்னாற்றல் தணிக்கை செய்தல் மற்றும் புதிதாக தெருவிளக்குகள் பொருத்தி பராமரிக்கும் பணி 10 ஆண்டுகளுக்கு பணிமேற்கொள்ளுதலின் கீழ் இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வரும் M/s. சபரி எலக்ட்ரீகல்ஸ், சென்னை நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி   வழங்கலாம்.<br>
ந.க.எண். 1379/2019/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>07.11.2019</td>
<td>420</td>
<td><u>பொருள் எண். 8</u><br>
திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண். ஆர்5/8056/2019 நாள். 21.09.2019 –ல் கர்நாடகா மாநிலம் ரெய்ச்சூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து உள்ளாட்சி தேர்தல் 2019–க்கு தேவையான வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்து வர உத்திரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வர், வருவாய் ஆய்வர் ஆகியோர் துப்பாக்கி ஏந்திய போலிசார் பாதுகாப்புடன் கர்நாடகா மாநிலம் ரெய்ச்சூர் மாவட்டத்திலிருந்து வாக்குப்பதிவு இயந்திரங்களை கன்டெய்னர் வாகனம் மூலம் எடுத்து வந்து திருச்சிராப்பள்ளி மாவட்டம் வண்ணான் கோவில் ஸ்ரீரங்கம் கோட்டாட்சியர் அலுவலகத்தல் 03.10.2019 ம் தேதியன்று பாதுகாப்பாக</td>
<td>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்படைத்துள்ளனர். எனவே மேற்கண்ட பணிக்கு சென்று வந்த வகையில் கீழ்கண்ட வகையில் செலவுகள் மேற்கொண்டதற்கு இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வர் திரு. கே. குமரேசன் அவர்கள் கொடுத்த பில்பட்டியல் படி தொகை ரூ. 64598/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>1. 29.09.2019 – பெங்களூர் தங்கும் விடுதி கட்டணம் – ரூ. 2800<br>2. 30.09.2019 – ரெய்ச்சூர் தங்கும் விடுதி கட்டணம் – ரூ. 2800<br>3. வாக்குப்பெட்டிகள் ஏற்றுக்கூலி பில்படி – ரூ. 12880<br>4. 01.10.2019 அனந்தப்பூர் தங்கும் விடுதி கட்டணம் – ரூ. 2970<br>5. 03.10.2019 வாக்குப்பெட்டிகள் இயக்குக்கூலி – ரூ. 14720<br>6. கன்டெய்னர் லாரி வாடகை – ரூ. 26028<br>7. 3 நபர்கள் உணவு கட்டணம் – ரூ. 2400<br>**மொத்தம் – ரூ. 64598**<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 777/2016/சி1** | |
| 07.11.2019 | 421 | **பொருள் எண். 9**<br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தேசிய, மாநில நெடுஞ்சாலைகள் தவிர்த்து நகராட்சி சாலைகளில் மாற்று இடம் தேர்வு செய்து நடமாடும் வண்டிகள் அமைப்புடன் DPR தயார் செய்து இந்நகராட்சிக்கு சமர்பித்த The Athens Charitable and Education Trust என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.5000/– வழங்க கோரி 25.09.2019–ம் தேதியில் பில்பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு ரூ. 5,000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 13/2014/எப்1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

____________ X ____________